THE BOGUS PRINCE

(TAMIL)

OFFICE OF THE REGISTRAR OF ...
27 JAN 1916
MADRAS

Approved by the Text-Book Committee

MADRAS:
... SAWMY NAIDU & SONS
1916

[Price 1½ As.

JB
031,
N15
179448

போலி ராஜ குமாரன்

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
27 JAN 1916
MADRAS

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1915 [விலை $1\frac{1}{2}$ அணா

போலி ராஜ குமாரன்

முதல் அத்தியாயம்

லாபாகான் தன்னை ராஜகுமாரனென நினைப்பது

அலெக்சாண்டிரியா என்பது எகிப்து தேசத்தி லுள்ள ஒரு பெரிய நகரம். அதில் அனேக ஆண்டுக ளுக்கு முன் லாபாகான் என்னும் யோக்கியனை தையற்காரனொருவன் இருந்தான். அவன் அன்றாடம் கூலிக்கு வேலை செய்பவனே யல்லாமல், சொந்தமாகக் கடை வைத்து வேலைசெய்பவ னல்லன். அவன் மிகவும் கெட்டிக்காரனான யஜமான னொருவனிடத்தில் வேலை செய்து வந்தான்.

2. லாபாகான் மிகவும் கைதேர்ந்த வேலைக்கார னாக இருந்தபோதிலும், அவனுடைய நடக்கை கொஞ் சம் விபரீதமாக இருந்தது. அவன் வேலையிற் சோம் பேறி யென்றாவது, விகாரமாகத் தைப்பவ னென்றா வது, அஜாக்கிரதையாகத் தைப்பவ னென்றாவது யாரும் சொல்ல முடியாது. அவன் நன்றாகத் தைக்கக் கூடியவனே; நன்றாய்க் கஷ்டப்பட்டும் உழைப்பவனே. ஆனாலும், அவன் சோம்பேறி யென்று தவறாக ஜனங் கள் சொல்லுவார்கள்.

3. ஜனங்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு. அதென்னவென்றால், அவன், அனேகமாக, இருந்த விடம் விட்டு நகராமல் வெகுநேரம் மிக வேகமாகத் தைத்துக்கொண் டிருப்பான்; ஆனால், சிலவேளைகளில் அவன் யோசனையில் ஆழ்ந்தி அசைவற்றுப் பொம்மை போல் உட்கார்ந் திருப்பான்; தூரத்தில் எதையோ உற்றுப் பார்க்கிறவனைப்போல இருப்பான். அப்போது அவனைப் பார்த்தால் விபரீதமாகத் தோற்றும். அவனுடைய யஜமானனும் யஜமானனுடைய தோழர்களும் அவனைப் பார்த்துத் தங்கள் தோளைக் குலுக்கிக் கொண்டு, 'லாபாகானைப் பார்; அவன் மறுபடி தன் கம்பீர பாவனை மேற்கொண்டு விட்டான்' என்று ஒருவருக் கொருவர் பேசிக்கொள்வார்கள்.

4. எகிப்து தேசத்தா ரெல்லாரும் மகம்மதியர்கள் அதாவது, அவர்கள் மகம்மது என்னும் தீர்க்கதரிசியின் போதனைகளை நம்பி அவற்றின்படி நடக்கிறவர்கள். மகம்மது என்பவர் திவ்விய திருஷ்டியுள்ள தீர்க்கதரிசி யென்பது அவர்களுடைய கொள்கை. நல்ல மகம்மதியர்களாக இருப்பவர்க ளெல்லாரும் செய்ய வேண்டிய கடமையொன்று உண்டு. அதென்னவென்றால், அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மசூதுக்குப் போய் அங்கே அல்லாவைப் பிரார்த்திக்க வேண்டியது. கடவுளை அவர்கள் 'அல்லா' என்பார்கள்.

5. ஆகையால், மற்றவர்களைப் போல லாபாகானும் வெள்ளிக்கிழமை தோறும் மசூதுக்குப் போவான். ஆனால், மற்றவர்க ளெல்லாரும் பிரார்த்தனை செய்துவிட்டு வீட்டுக்குப் போய்த் தங்கள் தங்களுடைய அலுவலைக் கவனிப்பதற்காகப் பள்ளிவாசலி லிருந்து வேகமாகத் திரும்பிப் புறப்பட்டுப் போவார்கள். லாபா

கான் மாத்திரம் அழகான அங்கியைத் தரித்துக் கொண்டு மெதுவாகப் பள்ளிவாசலி லிருந்து வெளிப் படுவான். பணம் நிரம்பச் செலவிட்டு நெடுநாள் உழைத்து அவன் அந்த அங்கியைச் செய்து வைத்தி ருந்தான். அதைப் போட்டுக் கொண்டு அந்தப் பட்ட ணத்துச் 'சௌக்கு' களிலும் தெருக்களிலும் நிதான மாகவும் கம்பீரமாகவும் உலவுவான்.

6. அப்போது அவனுடைய தோழர்களுள் யாரா வது சந்தித்து, அவர்களுடைய வழக்கப்படி, 'உனக்கு க்ஷேம முண்டாகுக' என்று வாழ்த்தினாலும், 'தோழா! க்ஷேமமா!' என்று கேட்டாலும், அவன் ஒய்யாரமாகக் கையை அசைப்பான்; சில வேளைகளில் கொஞ்சம் அகம்பாவமாகத் தலையை யசைத்துவிட்டுப் போவான்; சிநேகப் பாங்காக நின்று அவர்களுடன் நின்று அவர் களுடன் ஒரு நிமிஷமும் பேசமாட்டான்.

7. அப்படிப்பட்ட சமயத்தில் அவனுடைய யஜ மானன் அவனைச் சந்தித்தால், அவன் வேடிக்கையாக, 'லாபாகான், நீ ராஜ குமாரனாக இருந்திருக்க வேண் டும்' என்று சொல்லுவான். அதைக் கேட்டு லாபா கான் மனமகிழ்ந்து, 'ஆ! நீங்களும் அதைக் கவனித்தீர் களா?' என்று பதில் சொல்லுவான்; அல்லது, 'ஆம்! நானும் அப்படியே அடிக்கடி நினைத்திருக்கிறேன்' என்பான்.

8. இப்படி மூடத்தனமாக அந்தத் தையற்காரன் வெகு காலம் நடந்து வந்தான். அவன் வேலையில் நல்ல கெட்டிக்காரனாக இல்லாவிட்டால் அவனுடைய யஜமானன் அவனைத் தன் வேலையிலிருந்து தள்ளிவிட் டிருப்பா னென்பது நிச்சயம்.

9. சுல்தானுடைய சகோதரனுன சீலிம் என்பவன் அலெக்சாண்டிரியாவின் வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் ஒருநாள் தன்னுடைய நேர்த்தியான அங்கி யொன்றைப் பழுது பார்க்கும்படி லாபாகானுடைய யஜமானனுக்கு அனுப்பினன். நாணயமான வேலை செய்யவேண்டி யிருந்தாலும், மிகவும் ஜாக்கிரதையாக வேலை செய்யவேண்டி யிருந்தாலும் அதை லாபாகானிடம் கொடுப்பது வழக்கமானதனுல், அவனுடைய யஜமானன் சீலிமினுடைய அங்கியை அவனிடத்திலேயே கொடுத்தான்.

10. அன்றையதினம் சாயங்காலம் மற்ற வேலைக்காரர்களும் யஜமானனும் தங்களுடைய வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போனபிறகு, லாபாகானுக்கு என்னவோ ஒருமாதிரியான எண்ணம் தோன்றியது. அதன்மீது அவன், தையற்கடைக்குத் திரும்பிப் போய், சுல்தானுடைய சகோதரனது அங்கி மாட்டியிருந்த இடத்தை அணுகினன்.

11. அந்த அங்கியை அவன் சிறிதுநேரம் ஆவலாக உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றுன்; அப்படி நிற்கையில், அதில் அமைந்திருந்த அழகிய குஞ்சங்களைச் சற்றுப் புகழ்ந்தான்; பிறகு, அந்த மகமல்லின் அற்புத வர்ணத்தையும் பட்டின் சிறப்பையும் பார்த்து ஆச்சரியப் பட்டான். அந்த அங்கியை எடுத்துத் தரித்துக் கொண்டு பார்த்தான். அது அவனுக்குச் சரியாக இருந்தது; அப்போது பார்த்தவர்கள் அது அவனுக்காகத் தைத்ததே யல்லாமல் சீலிமுக்காகத் தைத்ததன்று என்று நினைக்கக் கூடியதாக இருந்தது.

12. அந்த அங்கியைத் தரித்துக் கொண்டதனுல், தான் சிறந்து விளங்குவதாக நினைத்து, அந்த மமகாரத்

துடன் லாபாகான் அந்த அறையில் முன்னும் பின்னும் நடந்துகொண் டிருந்தான். நிலைக் கண்ணாடியில் அவன் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டு, 'ராஜகுமாரன் என்னைவிட வேறு எப்படி இருப்பான்? நான் ராஜகுமாரனாக இருந்திருக்க வேண்டுமென்று என் யஜமானன் கூடச் சொல்லவில்லையா?' என்று தானாகவே சொல்லிக் கொண்டான். தான் ராஜகுமாரனெனவே அவனுக்குத் தோற்றியது; தான் உண்மையில் பெயரும் ஊரும் தெரியாத ஓர் அரசனது மகனென்றே நினைக்கலானான்.

13. அந்த எண்ணமே அவன் மனத்தில் குடிகொண்டது; வேறு எதையும் அவன் நினைக்க முடியவில்லை; ஆகையால், அவன் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டு உலகமெங்கும் திரியத் தீர்மானித்தான். அந்த ஊர் ஜனங்களுக்குப் புத்தி மிகவும் மந்தம்; அவன் தையற்காரன் என்று இருந்த போதிலும், உண்மையில் அவன் ராஜகுமாரனென்று அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை; அவர்கள் அவ்வளவு முட்டாள்கள்!

14. அந்த அழகிய அங்கியை யாரோ ஒரு நல்ல யக்ஷிணிதேவதை தனக்கென்று கொண்டுவந்து கொடுத்திருப்பதாக அவன் நினைத்தான். அவ்வளவு அருமையும் பெருமையுமான வெகுமதியை எவ்வளவு நன்றாக உபயோகிக்க வேண்டுமோ அவ்வளவு நன்றாக உபயோகிக்க வேண்டுமென்று அவன் தன்னைத்தானே எச்சரித்துக்கொண்டான். உடனே, தன்கையிலிருந்த கொஞ்சம் பணத்தையெடுத்து முடிந்துகொண்டு, இரவில் இருட்டு மிகுந்திருந்ததனால், ஒருவர் கண்ணிலும் படாமல் நகரத்தைவிட்டு வெளியேபோனான்.

இரண்டாம் அத்தியாயம்

ஓமாரின் கதையை லாபாகான் உணர்வது

1. நமது புதியராஜகுமாரன்போன இடங்களி லெல்லாம் அவனைப்பார்த்த ஜனங்கள் மிகவும் ஆச்சரி யப்பட்டார்கள். அவனே அழகான ஆடைதரித்திருந் தான்; ராஜ நடை நடந்தான்; ராஜாவைப்போலப் பாங்கு காட்டினான்; அப்படிப் பட்டவன், ராஜகுமா ரர்களைப்போல, குதிரைமீது போகாமல், நடந்து செல் லக் காரணம் என்ன என்று அவர்கள் மயங்கினார்கள். அதனைப்பற்றி அவர்கள் அவனைக் கேட்டதற்கு, அவன் தான் கால் நடையாகப் போவதற்குக் காரணங்கள் உண்டென்று கர்வமாகவும் கம்பீரமாகவும் அவர்களுக் குப் பதில் சொன்னான். ஆனாலும், ஜனங்கள் தன்னைப் பார்த்துச் சிரிப்பதையும் பரிகாசம் செய்வதையுங் கண்டு, அவன் ஒரு குதிரை வாங்கத் தீர்மானித்தான்.

2. அவன் சொற்பத்தொகை கொடுத்துக் கிழக் குதிரை யொன்று வாங்கினான். அது அவனுக்கு ஏற்ற தாக இருந்தது. அது சாதுவான குதிரை, துஷ்டத் தனமே அதனிடத்திற் கிடையாது; அதனால் அவனுக்கு ஒரு விதமான தொந்தரவுமில்லை; அதன்மீது ஏறிநடத் துவதற்காக அவன் குதிரைச் சவாரியில் தேர்ந்தவனாக இருக்கவேண்டிய ஆவசியகமும் ஏற்படவில்லை.

3. அந்தக் குதிரைக்கு அவன் 'மூர்வா' என்று பெயரிட் டிருந்தான். ஒரு நாள் அவன் அந்தக் குதிரை யின்மீதேறி மெதுவாகப் போய்க்கொண் டிருக்கையில், குதிரையின்மீது செல்லும் மற்றொருவன் அவனுக்குச் சமீபத்தில் வந்து தனக்குப் பேச்சுத்துணை வேண்டும்

என்று சொல்லித் தானும் அவனுடன் சேர்ந்து வரலாமா என்று கேட்டான்.

4. அப்படி வந்த புதிய ஆள் இளைஞன், சரசமிகுந்தவன், பார்வைக்கு அழகானவன், நல்ல பாங்குடையவன். அவர்கள் ஒருவருக்கொருவர், 'நீ எங்கேயிருந்து வந்தாய், எங்கே போகிறாய்' என்பதாக கேட்டுக் கொண்டு இனிமையாகப் பேசிக்கொண்டே சவாரி செய்தார்கள். புதிதாக வந்த தோழனும் தன்னைப் போலவே குறியில்லாமல் திரிகிறவனென்று லாபாகான் சீக்கிரத்திலேயே கண்டுகொண்டான்.

5. தன்பெயர் ஓமார் என்றும், எகிப்து தேசத்துத் தலை நகரமாகிய கெய்ரோவின் பாதுஷாவான எல்பிபே என்பவன் தன் மாமனென்றும் அந்தப் புதியதோழன் சொன்னான். மற்றும் தன் மாமன் மரணத்தருவாயில் தனக்கோர் கட்டளை யிட்டதாகவும், அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காகத் தான் பிரயத்தனப்பட்டுக் கொண்டு இருப்பதாகவும் அவன் சொன்னான். லாபாகான் அவனிடத்தில் தன்னைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்லவில்லை; ஆனால், தான் ராஜ வமிசத்திற் பிறந்தவனெனவும், வினோதார்த்தமாகப் பிரயாணப்பட்டவனெனவும் ஓமாருக்கு நம்பிக்கை யுண்டாகும்படி செய்வதற்கு முயன்றான்.

6. அவ்விருவரும் மனங்கலந்து பரஸ்பரமாகச் சந்தோஷப்பட்டுக்கொண்டு பிரயாணம் செய்தார்கள். மறுநாள் லாபாகான் ஓமாரைப் பார்த்து, அவனுடைய மாமன் அவனுக்கு இட்டிருக்கும் கட்டளை இன்னதென்று தனக்குச் சொல்லும்படி கேட்டான். அதற்கு ஓமார் சொல்லிய பதில் ஒரு கதையாக இருந்தது.

அதனைக்கேட்டு லாபாகான் ஆச்சரியப்பட்டான். அந்தக் கதை வருமாறு:

7. ஓமார் சிறு குழந்தையாக இருந்தது முதல் எல்பிபேயுடனே வசித்துவந்தான். அவனைப் பெற்றோர்கள் எவரென்பது அவனுக்குத் தெரியாது. அதுவரையில் எல்பிபேயின் சத்துருக்கள் மூன்று தடவை படையெடுத்து வந்து அவனைத் தாக்கினார்கள். அந்தச் சண்டைகள் ஒவ்வொன்றிலும் எல்பிபேயே தோல்வியுற்றான். கடைசிச் சண்டையில் அவனுக்கு ஆறாக் காயம்பட்டது. அதனால், தான் மரிக்கவேண்டியே வருமென்று அவன் தெரிந்துகொண்டான். ஆதலால், அவன் ஓமாரைத் தன்னண்டையில் அழைத்து, 'நீ எனக்கு மருமகன் அல்லே; நீ ஒரு பெரிய தேசாதிபதியின் மகன். நீ உன் தந்தையினிடத்திலிருந்தால் உனக்கு ஏதோ விபத்து வருமென்று சில பண்டிதர்கள் சொன்னதனால், உன் தந்தை உன்னைத் தன் அரண்மனையிலிருந்து அனுப்பிவிடவேண்டியதாயிற்று. உனக்கு இருபத்தொரு வயது ஆகிறவரையில் உன்னை உன் தகப்பனார் பார்ப்பதில்லையென்று சொல்லியிருக்கிறார்' என்று ரகசியமாகச் சொன்னான்.

ஓமாரினுடைய தந்தையின் பெயரை எல்பிபே அவனுக்குச் சொல்லவில்லை. ஆனால், அவன் தன் தந்தையைக் காணுவதற்குண்டான வழியைக் காட்டிக் கொடுத்தான்.

8. அடுத்துவருவது ராமாதான் மாதம்; அது மகம்மதிய வருஷத்தில் ஒன்பதாவது மாதம். அந்தமாதம் நாலாம்தேதி ஓமாருக்கு இருபத்தொருவயது ஆகிறது. அன்றைய தினத்தில் அவன் ஒரு கல்தூணண்டை போகவேண்டும். அந்தத் தூணிருக்குமிடம் அவனுக்

குத் தெரியும். அந்த இடம் அலெக்சாண்டிரியாவுக்குக் கிழக்கே வெகு தூரத்தில் நாலு நாள் பிரயாணத்தில் இருக்கிறது. அந்தத் தூணுக்கு அருகில் அனேகம்பேர் நின்றுகொண் டிருப்பார்கள். எல்பிபே அவனிடத்திற் கொடுத்திருக்கிற குத்துவா ளொன்றை அவன் அவர்களுக்குக் காட்டி, 'நீங்கள் தேடிக்கொண் டிருக்கிறவன் நானே' என்று சொல்லவேண்டும். 'உன்னைக் காப்பாற்றி வைத்த நபியின் மகத்துவமே மகத்துவம்' என்று அவர்கள் பதில் சொல்லுவார்கள். பிறகு, அவன் அவர்களுடன் கூடப்போனல் அவர்கள் அவனை அவனுடைய தகப்பனரிடத்திற்கு அழைத்துக்கொண்டு போவார்கள்.

மூன்றும் அத்தியாயம்

ஓமாரை லாபாகான் ஏமாற்றியது

1. அவன் சொல்லிய கதையை லாபாகான் மிகுந்த ஆவலோடு கேட்டுக்கொண் டிருந்தான். அதுமுதல் அவன் இளவரசனை ஓமாரைக்கண்டு வயிற்றெரிச்சற் பட்டுக்கொண் டிருந்தான். ஓமார் ஒருபெரிய பாதுஷாவின் மருமகனென வழங்கப்பெறுவதல்லாமல், நிஜமாக ஓர் அரசனுடைய மகனென்பது லாபாகானுடைய மனத்தைப் புண்ணக்கியது; ஏனென்றல், தான் பார்வைக்கு ராஜகுமாரனைப்போல இருந்தாலும், உண்மையில் எளிய தையற்காரனே; தான் கஷ்டப்பட்டு உழைத்து வயிறுவளர்க்க வேண்டியவனே.

2. அவன் ஓமாரையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கத் தலைப்பட்டான். ஓமாரினுடைய முகத்தில்

பெருந்தன்மைக்குரிய சாயை இருந்தது, அவனுடைய கண்கள் அழகாயிருந்தன, அவனுடைய கோலமும் பாங்கும் ஒய்யாரமாகவும் கம்பீரமாகவும் இருந்தன. உண்மையில், அவனிடத்திலுள்ள ஒவ்வொரு அமிசத்தினுலும் அவன் சாதாரண வேலைக்காரனைவிட மேலானவனென்று தெரிந்துகொள்ளக்கூடும். அவையெல்லாம் அப்படியிருந்தாலும் ஓமாரின் தகப்பனர் ஓமாரைவிடத் தன்னையே மிகப் பிரீதியாக ஏற்று உபசரிப்பாரென்று லாபாகான் நினைத்தான்.

3. பகலெல்லாம் அவன் அதுவே நினைவாக இருந்தான்; இரவிலும் அந்த நினைவினல் அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. மறுநாள் காலையில் அவன் எழுந்து பார்க்கும்போது, பக்கத்தில் ஓமார் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் இனித் தனக்கு வாய்க்கப்போகிற நல்லதிருஷ்டத்தைப்பற்றி அப்போது கனவு கண்டுகொண்டு இருந்தான் போலும். அந்தச் சமயத்தில், லாபாகானுக்கு ஒரு கெட்ட எண்ணம் தோன்றியது, ஓமாரைக் கொன்றுவிட்டு அந்தக் கற்றாணண்டை போய்த் தானே அரசனது மகனென்று சொன்னலென்னவென்று அவன் நினைத்தான்.

4. அங்கே காட்டவேண்டிய குத்துவாள் ஓமாரின் அரைக் கச்சில் சொருகப்பெற்றிருந்தது. அதனை லாபாகான் மெதுவாக உறையிலிருந்து எடுத்து, ராஜகுமாரனை அதனல் குத்தப்போனன். ஆனல், அவ்வளவு கொடிய காரியம் செய்வானேன் என்று அவனை குத்தாமல், வேறொரு யோசனை செய்தான்.

5. அந்த அருமையான கத்தியைத் தன் இடுப்புக் கச்சில் செருகிக்கொண்டு, ஓமாரின் நல்ல குதிரைக்குச் சேணங்கட்டி, அதன்மீது ஏறிக்கொண்டு போய்விட்

டான். பிறகு, ராஜகுமாரன் எழுந்து பார்க்கையில், லாபாகான் வெகு தூரம் அவனுக்கு முன்னுல் போய் விட்டான்.

6 அது ராமாதான் மாதம் முதல் தேதியில் நடந்தது. அந்தக் கற்றாணண்டைபோவதற்கு இன்னும் மூன்று நாள் இருந்தது. அந்தத் தூண் அவனுக்கு நன்றாகத்தெரியும். அங்கிருந்து அவன் இரண்டு நாளிற் சுலபமாக அவ்விடத்திற்குப் போகக்கூடும். ஆனபோதிலும், உண்மையான ராஜகுமாரன் வேகமாகப்புறப்பட்டு வந்து தன்னைப் பிடித்துவிடுவானென்று பயந்து அவன் குதிரையை விரைவாக நடத்திக்கொண்டு போனுன்.

7. இரண்டா நாள் சாயங்காலம் இன்னுங் கொஞ்ச தூரத்தில் அந்தத் தூண் இருப்பதை லாபாகான் கண்டான். அது ஒரு பெரிய மைதானத்தின் நடுவில் சிறு குன்றின் மீது இருந்தது. அவன் அந்தத் தூணைப் பார்த்தவுடனே அவனுடைய மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. ஆயினும், அவன் செய்துவந்திருக்கிற காரியத்தை யுத்தேசித்து, உண்மை வெளிப்பட்டால் தனக்கு என்ன ஆகுமோ என்ற பயம் அவனுக்கு உள்ளுக்குள் இருந்தது. அந்தப் பயம் அடிவயிற்றில் இருந்தபோதிலும், தான் ராஜகுமாரனுகப் பிறந்தவன் என்னும் எண்ணம் மேலிட்டு அவன் துணிவுகொண்டான். அந்தத் துணிவினுல் அவன் பின்திரும்ப வில்லை.

8. அந்தத் தூணைச் சுற்றியுள்ள பிரதேசம் வெறும் மணற்காடு. அவன் கையிற் கொஞ்சம் ஆகாரம்கொண்டு போகா திருந்தால், அங்கே என்னசெய்வதென்று அந்தப் போலி ராஜகுமாரன் விழிக்கவேண்டியதேயாகும். ஆகையால், அவன் அங்கே இருந்த ஈச்சமரத்து நிழ

வில் தன் குதிரையைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, இனிச் செய்யவேண்டிய காரியத்திற்குச் சித்தமாகும் பொருட்டு, கீழே உட்கார்ந்து அந்த உணவிற் கொஞ்சம் புசித்தான்.

நான்காம் அத்தியாயம்

தூணண்டையில்

1. மறுநாள் மத்தியானம் அனேகம் குதிரைகளும் ஒட்டைகளும் அந்த மைதானத்தைக் கடந்து தூணை நோக்கிச் செல்வதை அவன் கண்டான். அந்தக் குதிரைகளும் ஒட்டைகளும் அந்தத் தூணிருந்த குன்றின் அடிவாரத்தில் வந்து நின்றன. அவைகளோடு வந்திருந்த ஆட்கள் அழகிய கூடாரங்கள் பலவற்றை அங்கே அடித்தார்கள். அந்தக் கூடாரங்களையும் குதிரைகளையும் ஒட்டகங்களையும் பார்க்கும்போது அவை ஆடம்பரமாகவும் விலையுயர்ந்தவைகளாகவும் இருந்தன. அவை ஒரு பிரபலமான தேசாதிபதியைச் சேர்ந்தவைகளாக இருக்கவேண்டுமென்பது தெளிவாக விளங்கியது.

2. அங்கே கூடியிருந்த மகா ஜனங்களெல்லாரும் எவனோ ஒருவனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்பதை லாபாகான் கண்டுகொண்டான். அவன் உடனே அங்கேபோய், ராஜகுமாரன் தானேயென்று தெரிவித்துக்கொள்வது அவனுக்கு இஷ்டமேயானாலும், குறிப்பிட்ட காலம் மறுநாள் ஆகையால் அதுவரையில் பொறுத்திருப்பதே நலமென்று அவன் சும்மா இருந்து விட்டான்.

3. மறுநாட் காலையில் அவன் படுக்கையை விட்டு மிகவும் சந்தோஷமாக எழுந்து, தான் செய்யப்போகிற பெரிய காரியத்திற்கு வேண்டிய முஸ்தீது பண்ணிக் கொண்டான். அவன் குதிரையின் மீது ஏறுகையில், ராஜகுமாரனை ஓமாருக்குத் தான் செய்த அநியாயத்தை நினைத்துக்கொண்டான். அவன் அங்கே நித்திரைத்தெளிந்து பார்க்கையில் தன் தோழன் தன்னை மோசம் செய்துவிட்டானென்று கண்டு எவ்வளவு துக்கப் படுவான் என்று நினைத்தான். ஆயினும், லாபாகான் அப்போது பின்திரும்பப் போகிறதில்லை. அவனுக்கு அதிருஷ்டம் நன்றாக இருந்தது. தான் ராஜகுமாரனைப் போல இருப்பதை அவன் ஞாபகப்படுத்திக் கொண்டான்.

4. அவன் குதிரை மீது ஏறி அதைப் பாய்ச்சலாக விட்டுக்கொண்டு கால்மணி நேரத்திற்குள் குன்றின் அடிவாரத்திற்கு வந்துசேர்ந்தான்; அங்கே இறங்கி, சமீபத்திலிருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டினான். பிறகு, ராஜகுமாரனாகிய ஓமாரினுடைய குத்துவாளை யுருவிக் கொண்டு அந்தத் தூணை நோக்கி நடந்தான். அவன் அதனைக் கிட்டினபோது, ஒரு கிழவனைச் சுற்றி ஆறு பேர் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் கிழவனைப் பார்க்கும்போதே அவன் பிரபுவென்று தெரிந்தது. அவன் பொன் சரிகை யிழைத்த சிறப்பான அங்கி தரித்திருந்தான். அதன்மீது அழகிய வெண்பட்டுச் சால்வை போர்த்திருந்தான்.

5. அவன் தலையில் முண்டாசு வைத்துக்கொண்டிருந்தான். முண்டாசு என்பது நீளமான பட்டுத் துணியையாவது பருத்திநூல் துணியையாவது தலையில் சுற்றிச் சுற்றிக் கட்டுவது. அதற்குத் தலைப் பாகை

யென்றும் பெயர். அவன் தரித்திருந்த முண்டாசில் அழகிய வைரக் கற்கள் அனேகம் பொதியப் பெற்றிருந் தன. அதனால், அவ்வரசன் சீமானென்பது விளங்கியது.

6. லாபாகான் அவனிடத்திற் போய் வணங்கிச் சலாம் செய்தான். பிறகு, அந்தக் குத்துவாளை அவன் கையிற் கொடுத்து, 'நீங்கள் தேடிக்கொண் டிருக்கிற வன் நானே' என்று குரல் நடுக்கத்தோடு சொன்னான்.

அந்தக் கிழவன் சந்தோஷ மிகுதியினால் கண்ணீர் உதிர்த்து, 'வாழி, வாழி, உன்னைக் காப்பாற்றி வைத்த நபி வாழி; ஒமார்! என் அருமை மகனே, வந்து என்னை கட்டிக் கொள்' என்று பதில் சொன்னான்.

அந்த உருக்கமான வார்த்தைகளைக் கேட்டுத் தையற்காரன் மிகவும் வெட்கமுற்று, சந்தோஷம் ஒரு பக்கத்தில் உற்சாகமெழுப்ப, வெட்கமொரு பக்கத்தில் மனத்தை ஆழ்ந்த பெருமூச்செறிந்து கொண்டு அந்தக் கிழ அரசனுடைய கைக்குள் நெகிழ்ந்தான்.

7. ஆனால், அவனுக்கு உண்டான பெரு மகிழ்ச்சி வெகு நேரம் இருக்கவில்லை; ஏனென்றால், கிழவரசன் அணைத்துத் தழுவிய கட்டி லிருந்து அவன் விடுவித்துக் கொண்டவுடனே, ஒருவன் குதிரையேறி மைதானங் கடந்து குன்றை நோக்கி வருவதைக் கண்டான். அந் தக் குதிரையையும் அதன்மீது சவாரி செய்கிறவனையும் பார்த்தால் என்னவோ போலிருந்தது. அவ்வெளிய பிராணி விகாரமாகத் தள்ளாடி நகர்ந்துகொண் டிருந் தது. வேகமாகச் செல்வதற்கு அதற்கு இஷ்டமில் லையோ, சக்தி இல்லையோ, தெரியவில்லை. சவாரி செய் கிறவனே அதைக் கையினாலும் காலினாலும் அடித்து உதைத்து முன் நடத்திக்கொண் டிருந்தான்.

8. அந்தக் குதிரை இன்னதென்றும் அதன்மீது வருகிறவன் இன்னவனென்றும் லாபாகான் உடனே தெரிந்து கொண்டான். அந்தக் குதிரை லாபாகானுடைய கிழத்தட்டு 'மூர்வா' என்பதே; அதன்மீது வருகிறவன் உண்மையான ராஜ குமாரனாகிய ஒமார். அப்படி யிருந்தும் லாபாகானுக்குத் துர்புத்தி போகவில்லை. அவன் தான் சொல்லிய பொய்யை, என்ன வந்தாலும் வரட்டுமென்று, சாதிக்கத் தீர்மானித்தான்.

ஐந்தாம் அத்தியாயம்

சுல்த்தானுடைய அரண்மனைக்குப் போதல்

1. ஒமார் வெகு தூரத்தில் வந்துகொண் டிருக்கும் பொழுதே குன்றின்மீது இருந்த ஜனங்களுக்குச் சைகை காட்டுவதை அவர்கள் பார்த்துக்கொண் டிருந்தார்கள். குதிரை வெகு துர்ப்பலமானதாக இருந்தும் அவன் சீக்கிரத்தில் குன்றண்டை வந்து சேர்ந்தான். உடனே குதிரையினின்று குதித்து அவன் மிக அவசரமாக அந்தத் தூணை நோக்கிச் சென்றான்.

அங்கே இருந்த ஜனங்களைப் பார்த்து, 'நில்லுங்கள், நீங்கள் எவர்களா யிருந்தாலும் அந்தத் துன்மார்க்கப் பயலுடைய வார்த்தையை நம்பி மோசம் போகாதீர்கள். நான்தான் ஒமார். அவனல்லன்' என்று அவன் உரத்துக் கூவினான்.

2. அந்த வார்த்தைகளைக் கேட்டு அந்தக் கிழ அரசனும் அவனைச் சுற்றி நின்றுகொண் டிருந்தவர்களும் ஆச்சரியப்பட்டுத் திகைத்து நின்றார்கள். அவர்

களுக்கு வாய் பேச முடியவில்லை. லாபாகான் சற்றும் தயங்காமல் தன் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டு அந்தக் கிழ அரசனைப் பார்த்து, 'காருண்ணிய மிகுந்த தந்தையே, இறைவரே! அந்த மனிதனுடைய வார்த்தையை நம்பாதீர்கள். அவன் அலெக்சாண்டிரியாவில் அன்றாடம் கூலி வேலை செய்து கொண்டிருந்த லாபாகான் என்னும் தையற்காரன் என்று நினைக்கிறேன். அவனைப் பார்த்து நாம் இரக் கப்பட வேண்டுமே யல்லாமல் கோபப்படக் கூடாது' என்று சொன்னான்.

3. அந்த வார்த்தைகள் காதிற் பட்டவுடனே ஓமா ருக்கு வெறி மூண்டது. கோபாவேசத்தினால் அவன் லாபாகான் மீது பாயுந் தருணத்தில் அந்தக் கிழ அரச னுடைய பரிவாரங்கள் முன் வந்து அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

அப்போது அந்தக் கிழ அரசன் லாபாகானைப் பார்த்து, 'செல்வக் குமரா! உண்மையாக அந்தப் பய லுக்குப் பித்துப் பிடித்திருக்கிறது' என்று சொல்லி விட்டு, தன் ஆட்களைப் பார்த்து, 'அவனைக் கட்டி ஓர் ஒட்டகத்தின் மீது போடுங்கள். ஐயோ பாவம்! நம் மாலான சகாயம் செய்து அவனை அனுப்புவோம்' என்றான்.

4. சிறிதுநேரம் கழிந்த பிறகு ஓமார் கோபம் தணிந்து, கண்ணில் நீர் தளும்ப, அந்தக் கிழ அரசனைப் பார்த்து, 'நீங்களே என் தந்தையென்று என் மனச் சாக்ஷி சொல்லுகிறது. என் தாயாரின் மீது உங்க ளுக்கு இருந்த அபிமானத்தை நினைத்து என் வார்த் தைகளைச் சற்றுச் செவி சாய்த்துக் கேளுங்கள்' என்றான்.

5. 'பேஷ்! அந்தப் பையல் மறுபடி பிதற்ற ஆரம்பிக்கிறுன். இந்த விபரீதமான எண்ணங்கள் அவன் மனத்தில் எப்படிப் புகுந்தனவோ?' என்று அந்தக் கிழ அரசன் உரக்கச் சொன்ஞன்.

6. அரசன் பிறகு லாபாகான் பக்கமாகத் திரும்பிஞன். லாபாகான் அவனை அழைத்துக்கொண்டு குன்றினின்று மெதுவாக இறங்கிஞன். கீழே திவ்வியமான குதிரைகள் பல நின்றுகொண் டிருந்தன. அவர்கள் இருவரும் இரண்டு குதிரைகளின்மீது ஏறிக்கொண்டு, பரிவாரங்கள் பின்ருெடர்ந்து வர, முன் நடந்து மைதானத்தைத் தாண்டிஞர்கள். அந்தத் துரதிருஷ்டம் பிடித்த ஒமாரின் கையையும் காலையும் கட்டி அவனை ஓர் ஒட்டகத்தின் முதுகில் வைத்து இறுகக் கட்டிவிட்டார்கள். அவன் கட்டவிழ்த்துக் கொண்டு ஓடிப் போகாமற் பார்த்துக் கொள்ளும் பொருட்டு இரண்டு குதிரை வீரர்கள் அவன் பக்கத்தில் சவாரி செய்து கொண்டு வந்தார்கள்.

7. அந்தக் கிழ அரசன் நிஜமாகச் சுல்த்தானே. சுல்த்தான் என்னும் பட்டம் மகம்மதிய தேசத்து அரசருக்கு உரியது. ஒமார் பிறக்கும் வரையில், சுல்த்தானுக்குக் குழந்தைகளே இல்லை. குழந்தை பிறந்தவுடனே, பெற்றோர்கள் அக் குழந்தையின் அதிருஷ்டங்களைப் பற்றி ஜோசியரைக் கேட்பது வழக்கம். அந்தக் குழந்தை சுகமாக வாழுமா என்பதையும், அதன் ஆயுள் நீடித்திருக்குமா என்பதையும், மற்றுமுள்ள விஷயங்களையும் ஜோசியர்கள் கிரகங்களை கொண்டு கணித்துச் சொல்லுவார்கள்.

8. ஒமாருக்கு இருபத்தொரு வயது ஆகும் வரையில் அவனுடைய அந்தஸ்துக்கு மோசம் எவராவது

செய்து கொண்டே இருப்பார்களென்று ஜோசியன் சுல்த்தானுக்குச் சொல்லி யிருந்தான். அவனுக்கு அப்படிப்பட்ட ஆபத்துக்கள் வருவதற்கு இடமில்லாமலிருக்கும் பொருட்டு, இருபத்தொரு வயது ஆகும் வரையில் அவன் தனக்கு விசுவாஸமுள்ள சினேகிதனை எல்பிபே என்பவனிடத்தில் வளர்ந்து வரும்படி விட்டு வைத்திருந்தான். அந்த வர்த்தமானங்களை யெல்லாம் லாபாகானுக்கு உரைத்துச் சுல்தான் அவனைப் பார்த்து, 'என் அருமைக் குமரா! நீ இவ்வளவு பெருந்தன்மையாகவும் பலசாலியாகவும் இருப்பதைக் காண என் மனம் பூரிக்கிறது' என்று சொன்னான்

9. அவர்கள் சுல்த்தானுடைய நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே எல்லாரும் சந்தோஷமாக அவர்களைப் பார்க்க வந்தார்கள். புதிய இளவரசன் வருகிறான் என்ற செய்தி வெகு சீக்கிரத்திற் பட்டணங்களிலும் கிராமங்களிலும் பரவியது. ரம்மியமான மலர்களையும் மரக் கிளைகளையுங் கொண்டு ஜனங்கள் தெருக்களில் விசித்திரமான கமான்கள் கட்டி வைத்தார்கள். வீடுதோறும் தோரணங்களும் சித்திரத் தொங்கல்களும் விளங்கின. அவ்வளவு சுந்தரமான இளவரசனைத் தங்களுக்கு அனுக்கிரகம் செய்ததற்காக ஜனங்களெல்லாரும் கடவுளையும் அவருடைய தூதராக வந்த மகம்மது நபியையும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

10. அவ்வளவு சிறப்பாக ஜனங்கள் அவனை வரவேற்று உபசரிப்பதைக் கண்டு, அந்தத் தையற்காரன் பேரானந்த மடைந்தான்; அவ் வெளிய ஓமாரோ பரம துக்கத்திற்கு ஆளானான். அவனை இன்னும் கயிற்றினாற் கட்டி வைத்திருந்தார்கள். இனி நற்கதி

பிறக்குமெனும் ஆசை அவனுக்கு இல்லாமற் போயிற்று. அவனைக் கவனிப்பார் எவரும் இலர்; ஆயினும், அவ்வளவு ஆடம்பரமும் சிறப்பும் கோலாகலமும் அவனை யுத்தேசித்தே யன்றோ?

11. ஜனங்கள் களிமிகுந்து, 'ஓமார், ஓமார்' என்று அடிக்கடி கூவிக் குதிப்பார்கள்; ஆயினும், அந்தப் பெயருக்கு உரியவனை எவரும் திரும்பிப் பார்க்கவேயில்லை. அவ்வளவு இறுகக் கட்டி வைக்கப்பட் டிருக்கிறவன் எவனென்று அப்போதைக் கப்போது யாராவது கேட்பதும், அவனொரு பைத்தியங் கொண்ட தையற்காரனென்று காவலாளிகள் பதில் சொல்லுவதுமாக இருந்தது. அந்தப் பதில் ஓமாரின் காதில் நாராசம் போலப் பாயாதா? அவனுக்கு அப்பொழுது என்ன கோபம் வரும்?

ஆறும் அத்தியாயம்

அரண்மனையில்

1. அவர்கள் மேற்சொல்லியவாறு எட்டு மணி நேரம் சவாரி செய்து சுல்தானுடைய தலைநகரம் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்கு, மற்றப் பட்டணங்களில் நடந்ததை விட, வெகு சிறப்பாகவும் உபசாரமாகவும் மரியாதைகள் நடந்தன. சுல்தானுடைய மனைவியாகிய சுல்த்தான பெருந்தன்மை வாய்ந்த கிழ மாது. அவள் அரண்மனைக்குள் சிறந்த மண்டபம் ஒன்றில் அவர்களுடைய வரவை எதிர் பார்த்துக் கொண் டிருந்தாள். அந்த மண்டபத்தில் அழகிய

ரத்ன கம்பளம் பரப்பி யிருந்தது; சுவர்களில் நீல வர்ணச் சிலைகள் அலங்காரமாகத் தொங்கிக்கொண்டு இருந்தன; அந்தத் தொங்கணிகளைப் பொன் சரடுகளிற் கோத்து வெள்ளிக் கொக்கிகளில் மாட்டியிருந்தார்கள்.

2. அவர்களெல்லாரும் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்த பொழுது சூரியாஸ்தமனம் ஆனபோதிலும், அங்கங்கே அநேக தீபங்கள் ஏற்றி வைத்திருந்ததனால் பகலில் உள்ள பிரகாசமே பரவி இருந்தது. அந்தத் தீபங்கள் பலவகையான வர்ணக் கண்ணாடிக் கூடுகளில் வைக்கப் பெற்றிருந்தன. அந்த மண்டபத்தின், ஒரு கோடியில் ஒரு சிங்காதனம் இருந்தது. அந்தச் சிங்காதனத்தில் ஏறுவதற்கு நான்கு படிகள் இருந்தன. சிங்காதனம் தங்கமும் வைரங்களும் இழைக்கப்பெற்றிருந்தது. சுல்த்தானுடைய ஸம்ஸ்தானத்திலுள்ள பெரிய பிரபுக்களில் நான்கு பேர் திவ்வியமான சிவப்புப் பட்டாடை ஒன்றை யெடுத்துச் சுல்த்தானுவின் தலைமீது வாசனியாகப் பிடித்துக்கொண்டு இருந்தார்கள். மற்றொருவர் மயிலிறகினாலாகிய விசிறி கொண்டு அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்துகொண் டிருந்தார்.

3. தன் கணவனும் மகனும் வருவார்களென்று அவள் அங்கே காத்துக்கொண்டிருந்தாள். மகனை அவள் இருபத்தொரு வருஷமாகப் பார்க்கவில்லை. ஆயினும், அவனை அவள் தன் சொப்பனத்தில் அடிக்கடி பார்த்திருக்கிறாள். அவனை நேரிற் பார்த்தவுடனே கண்டுகொள்வாள். சிறிதுநேரத்தில் அவளுக்கு அவர்கள் வரும் ஊர்கோலத்தின் சத்தம் கேட்டது; ஜனங்கள் களிமிகுந்து கூவிக்கொண் டிருந்தார்கள்; வாத்தியங்கள முழங்கின; குதிரைகளின் குளம்படிச் சத்தம் ஒலித்தது.

4. அந்தச் சத்தம் வரவரச் சமீபத்திற் கேட்டது; பிறகு கதவுகள் சரேலெனத் திறக்கப் பெற்றன. இரு சாரியிலும் வேலைக்காரர்கள் முழந்தாளிட்டுப் பணிந்து சேவிக்க, சுல்த்தான் சந்தோஷமாக உள்ளே வந்து தன் மகனைக் கைப்பிடித்துச் சுல்த்தானுவின் சிங்காதனத்தண்டை கொண்டுபோய் விட்டான்.

5. சுல்த்தானுவைப் பார்த்து, 'நீ இத்தனை நாளாக எதிர் பார்த்துக் கொண்டிருந்தவனை இதோ கொண்டு வந் திருக்கிறேன்' என்று சுல்த்தான் சொன்னுன். சுல்த்தானு அந்தத் தையற்காரனைப் பார்த்துவிட்டுப் பிறகு வருத்தத்தோடு தன் கணவனைப் பார்த்தாள். கடைசியில் அவள், 'இவன் என் மகனல்லன். அடிக்கடி நான் கனவிற் கண்டிருப்பது இந்த முகமன்று' என்று சொன்னுள்.

6. அதனைக் கேட்டுச் சுல்த்தான் கோபமாக அவளுக்குப் பதில் சொல்லப் போகும் தருணத்தில், கதவைப் படீரெனத் திறந்துகொண்டு ஓமார் உள்ளே ஓடிவந்தான். அவன் தன் பலமெல்லாங் கொண்டு சாகசம் பண்ணிக் காவலாளிகளி னிடம் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டான். அவர்கள் அவன் பின்னுல் ஓடிவந்துகொண் டிருந்தார்கள். அவன் அந்தச் சிங்காதனத்தின் முன்னுல் விழுந்து 'தயையில்லாத் தந்தையே! இனி இந்த அவமானம் பொறுக்கமாட்டேன். நான் இங்கேயே பிராணனை விடுகிறேன்' என்று கூவினுன்.

7. அந்த வார்த்தைகளைக் கேட்டு எல்லாரும் பிரமித்தார்கள். மண்டபத்திலிருந்த காவலாளிகள் ஓமாரின் மீது பாய்ந்து அவனை மறுபடி கட்டும் தருணத்தில், சுல்த்தானு சிங்காதனத்தினின்று கீழே குதித்து,

'நில்லு! இவன்தான் என் மகன், இவன்தான் என் மகன். இவனை இதற்கு முன் பார்த்திராவிடினும், என் கனவுகளில் தோன்றிய முகம் இதுவே' என்று இரைந்தாள்.

8. காவலாளிகளுக்குக் கொஞ்சங்கூட மனமில்லா விடினும் அவர்கள் ஒமாரைக் கட்டாமல் தங்கள் கையை யெடுத்துக்கொண்டு பின் வாங்கினர்கள். ஆனல், சுல்த்தான் அவர்களைக் கோபித்துக்கொண்டு அந்தப் பைத்தியக்காரனை மறுபடி கட்டும்படி கட்டளை யிட்டான்.

'இங்கே நானே யஜமானன். ஸ்திரீகளின் சொப் பனங்களைக் கவனிக்க மாட்டேன்' என்று சுல்த்தான் எடுப்பாகப் பேசினன். பிறகு, லாபாகானைச் சுட்டிக் காட்டி, இவனே என் மகன்; அதற்கு அறிகுறியான குத்துவாளை எல்பிபேயி னிடத்திலிருந்து கொண்டு வந்தவன் இவனே' என்றான்.

'அதனை அவன் என்னிடத்திலிருந்து களவாடி ஞன்; அவனை நான் வழியிற் சந்தித்து என் விருத்தாந் தத்தை யெல்லாம் சொன்னேன். பிறகு, நான் தூங்கிக் கொண் டிருக்கையில் அந்தக் குத்துவாளை அவன் திரு டிக்கொண்டு இப்போது என் நிலைமையில் தங்கள் மக னென நடிக்கிறான்' என்று ஒமார் கூவினன்.

9. ஒமாரின் வார்த்தைகளைச் சுல்த்தான் கவனிக் கவே இல்லை. அவன் பெரிய முரடன்; தன் அபிப்பிரா யங்களையே பாராட்டுவான்; அவைகளுக்கு மாருக எவர் என்ன சொன்னலும் கேட்கமாட்டான். ஒமாரை அங்கிருந்து இழுத்துக் கொண்டு போகும்படி கட்டளை யிட்டுவிட்டு, லாபாகானும் தானுமாகத் தன் அறைக்

1794

குப் போனான். இருபத்தைந்து வருஷ காலமாக வெகு நேசமாகவும் சந்தோஷமாகவும் கூடி வாழ்ந்து வந்த சுல்த்தானாவினிடத்தில் அவனுக்கு மிகுந்த வெறுப்பு உண்டாயிற்று.

10. மேலே நடந்த வர்த்தமானத்தினால் சுல்தானா மிகவும் விசனமுற்றாள். லாபாகான் புரட்டனென்று அவள் கண்டுகொண்டாள்; அந்த எண்ணம் அவள் மனத்தில் உறுதியாக நிலைகொண்டிருந்தது; அவன் தன் கணவனை ஏமாற்றிவிட்டான்; ஓமாரே தன்னுடைய உண்மையான மகன் என்று அவள் நம்பியிருந்தாள். ஆயினும், சில நாள் சென்ற பிறகு அவள் தன் துக்கத்தைச் சாந்தப்படுத்திக்கொண்டு, தன் கணவன் செய்திருக்கிற தப்பிதத்தை அவனுக்கு எடுத்துக்காட்டுவதற்கு ஓர் உபாயம் தேடினாள். லாபாகான் அந்தக் குத்துவாளை கொண்டுவந்து காண்பித்திருக்கிறான், ஓமாரின் ஜீவித கதையை வெகு நிதானமாகச் சொல்லியிருக்கிறான், தன்னுடைய உண்மையை வெளிவிடவில்லை; ஆதலால், அவன் பொய்யனென்று நிரூபிப்பது எளிதான காரியமன்று.

11. சுல்த்தானாவோடு தூணண்டை யிருந்தவர்களை அவள் வரவழைத்து, அங்கே நடந்த வர்த்தமானங்களையெல்லாம் விவரமாகத் தனக்குச் சொல்லும்படி கேட்டாள். அவர்கள் அப்படி யெடுத்துரைத்த பிறகு, பல யுக்திகள் செய்துபார்த்தாள். அவைகளுள் ஒன்றாவது பயன்படுமென்று தோன்றவில்லை. கடைசியில், ஒரு வேலைக்காரக்கிழவன் வந்து, ராஜகுமாரனாக விளங்குகிறவன் ஓமாரைப் பார்த்து அவன் ஒரு பைத்தியங்கொண்ட தையற்காரனென்றும், அவன் பெயர் லாபாகானென்றும் சொன்னதாக எடுத்துரைத்தான்.

12. இன்னும் அந்த வார்த்தையிற் சுல்தாவுக்கு விசேஷமொன்றும் தோன்றவில்லை. பிறகு, அந்த வேலைக்காரனே வந்து, 'ராஜகுமாரனாக விளங்குகிறவனே தையற்காரனாக இருக்கக்கூடும்; அவன் தன் பெயரையே ஓமாருக்குக் கொடுத்திருக்கலாம்' என்று ஊகித்துச் சொன்னான். அதன் மீது அவன் சுல்தானாவின் காதில் இரகசியமாக ஓர் உபாயம் ஓதினான். அது அவளுக்குத் திருப்தியாகப்பட்டது. 'அந்தப்படி செய்து பார்ப்போம்' என்று அவள் உடனே சொன்னாள்.

ஏழாம் அத்தியாயம்

லாபாகானுடைய உண்மை வெளியாகிறது

1. சுல்த்தானா வெகுகெட்டிக்காரி; அவள் தான் பிடித்த காரியத்தைச் சாதிப்பதற்குச் சுல்த்தானிடத்தில் எப்படி நடக்கவேண்டுமென்று நன்றாகத்தெரிந்தவள். ஆகையால், அவள் தன் கணவனிடத்திற் போய், தான் சொல்லியதெல்லாம் தப்பென்று சொல்லித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினாள். பிறகு, அவள் லாபாகனே தன் மகனெனபாவித்து நடப்பதற்குப் பிரியப்பட்டிருப்பதாகவும், ஆனால் அதற்கு ஒரேயொரு நிபந்தனை இருப்பதாகவும் சொன்னாள். அந்த இனிய மொழிகளைக்கேட்டுச் சுல்த்தான் அவள்மீது தான் கோபங்கொண்டதற்கு விசனப்படுவதாகவும், அவள் எந்த நிபந்தனை சொன்னாலும் அதற்குத் தான் ஒப்புக்கொள்வதாகவும் தெரிவித்தான்.

2. அவர்கள் இருவருள் எவன் உத்தமனென்று தான் கண்டுகொள்ள விரும்புவதாகச் சுல்த்தானா

சொன்னாள்: 'எவன் நன்றாகச் சவாரி செய்கிறான், எவன் நன்றாகச் சண்டை செய்கிறான்' என்று நான் பார்க்கப் போகிறதில்லை; ஏனெனில், அவை சாமானியமான காரியங்கள். நான் அவர்களுக்கு ஒரு வேலை இடப் போகிறேன். அதில் அவர்கள் ஒரு விதமான விசேஷத் திறமை காட்டவேண்டும். அவர்களுள் ஒவ்வொருவனும் ஓர் அங்கியும் ஒரு காற்சட்டையும் செய்யட்டும்; எவன் நன்றாக உடுப்புத் தைக்கிறான் என்று பார்ப்போம்' என்றாள்.

3. அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே சுல்த்தான் சிரித்துப் பிறகு அந்தப் பரீக்ஷை செய்யக்கூடாதென்றான். ஆனால், 'நான் சொல்லுகிற நிபந்தனையின் படி நடப்பதாக முன்னமே ஒப்புக் கொண்டீர்களே' என்று சுல்த்தானா எடுத்துச் சொன்னதின் மீது, தான் அப்படி வாக்குக் கொடுத்திருப்பது சுல்த்தானுக்கு ஞாபகம் வந்தது. சொன்ன சொல் தவறாதவனாதலின் அவன் அவளுடைய இஷ்டத்திற்கு இணங்கினான். ஆயினும், 'அந்தப் பித்தன் எவ்வளவு நன்றாக உடுப்பைத் தைத்த போதிலும் அவனை என் மகனெனக் கொள்ள மாட்டேன்' என்று சுல்த்தான் சொன்னான்.

4. தன் மகனென விவகரித்து வந்த லாபாகானிடத்திற் சுல்த்தானே போய், சுல்த்தானாவின் விருப்பத்தைத் தெரிவித்தான். லாபாகான் சந்தோஷத்தினாற் குதிகொண்டான். சுல்த்தானைத் திருப்திப் படுத்துவதற்காகச் செய்ய வேண்டியது அவ்வளவே யானால், அதனை வெகு சுலபமாகச் செய்து முடிக்கலாமென்று அவன் நினைத்துக் கொண்டான்.

5. லாபாகானுக்கு ஓர் அறையும், ஓமாருக்கு ஓர் அறையும் நொடி நேரத்திற் சித்தமாயின. ஒவ்வொரு

வனுக்கும் கொஞ்சம் பட்டுத் துணி, கத்திரிக்கோல், ஊசி, நூல் ஆகிய இவைகளைக் கொடுத்து வேலை செய்யச் சொன்னார்கள். அது ஒரு விளையாட்டுச் சமாசார மென்று சுல்த்தான் நினைத்திருந்தான். தன் மகன் எப்படிப்பட்ட உடுப்புத் தைக்கிறானோ பார்ப்போ மென்றிருந்தான். சுல்த்தானாவுக்கோ கவலை அதிகமாக இருந்தது; தான் செய்த யுக்தி பலிக்குமோ பலிக்காதோ என்று அவள் சஞ்சலப்பட்டுக்கொண் டிருந்தாள். அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கு அவர்களுக்கு இரண்டு நாள் தவணை கொடுத்தார்கள்.

6. மூன்றும் நாள் சுல்த்தான் தன் மனைவியை வரவழைத்தான். அவள் வந்து சேர்ந்தவுடன், அந்த இரண்டு வேலைக்காரரையும் அவர்கள் செய்துள்ள உடுப்புக்களையும் தன் முன் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். லாபாகான் மிகுந்த கர்வத்தோடு முன் வந்து தான் செய்த உடுப்பை யெடுத்துச் சுல்த்தானுடைய கண்ணுக் கெதிரில் தூக்கிப் பிடித்தான்.

'பாருங்கள்! என் அருமைத் தாய் தந்தையரே! இது சிறப்பான உடுப்பு அன்றோ? இந்த அரண்மனையிலுள்ள தையற்காரர்களுள் எவனும் இப்படி வேலை செய்ய மாட்டானென்று தைரியமாகச் சொல்லுவேன்' என்றான்.

7. சுல்த்தானா புன்சிரிப்புக் கொண்டு, ஒமாரைப் பார்த்துத் திரும்பி, 'நீ என்ன காட்டப் போகிறாய்? மகனே!' என்றாள்.

அந்த ராஜகுமாரன் பட்டுத்துணியையும் கத்திரிக் கோலையும் தரையில் வீசியெறிந்துவிட்டு, 'நான் குதிரை யேற்றமும் சாஸ்திரவித்தையும் கற்றிருக்கிறேன்; இந்

தத் தையல் வேலை நான் அறியேன். கெய்ரேவுக்கு அதிபதியான எல்பிபேயின் மருமகனுக்கு இது தகாது' என்று கோபமாகச் சொன்னான்.

8. 'ஓ! நீயே என் கணவனுக்கு உண்மையான பிள்ளை' என்று சுல்தானா கூவினாள். பிறகு, சுல்த்தானைப் பார்த்து, 'என் கணவரே, இறைவரே! நான் இந்தத் தந்திரம் செய்ததற்கு என்னை மன்னிக்கவேண்டுகிறேன். ராஜகுமாரன் எவனென்பதும், தையற்காரன் எவனென்பதும் இப்பொழுது தங்களுக்கு விளங்குகிறதா? தங்கள் குமாரன் செய்திருக்கும் உடுப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறது. அவனுக்குத் தையல் வேலை எவர் சொல்லிக் கொடுத்தாரென்று அவனைக் கேட்க விரும்புகிறேன்' என்றாள்.

9. சுல்த்தான் வாயைத் திறவாமல், சிறிதுநேரம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தான். அவன் மனத்தில் சந்தேகம் தோன்றி, முதலில் தன் மனைவியையும், பிறகு லாபாகானையும் பார்த்தான். அப்போது லாபாகான் தன் முகத்தை ஒளித்துக் கொள்ள முயன்று கொண்டிருந்தான். அதனால், அவனுடைய மாயம் வெளியாயிற்றென்பது விளங்கியது.

கடைசியில் சுல்த்தான், 'இது போதுமான அத்தாக்ஷியாகாது. நான் மோசம் போயிருக்கிறேனா இல்லையா என்று கண்டுகொள்வதற்கு மற்றொரு வழி எனக்குத் தெரியும்' என்றான்.

10. தன்னுடைய குதிரைகளுள் மிகவும் விரைவாகச் செல்லக்கூடியதைச் சித்தமாக்கிக் கொண்டுவரச் சொல்லி, அதன்மீது தாவியேறிக்கொண்டு, பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள காட்டுக்குள் சென்றான். அவ்

விடத்தில் ஒரு தேவதை இருக்கிறாள். அவள் விவேகத்திற் சிறந்தவள். அந்தச் சுல்த்தான் பட்டத்திற்கு வருமுன் அனேக அரசர்களுக்கு இக்கட்டுச் சமயங்களில் அடிக்கடி நல்ல புத்தி கூறியிருக்கிறாள். சுல்த்தான் அந்தத் தேவதையைப் பார்க்கப்போனான்.

11. காட்டின் நடுவில் ஒரு மைதானம் இருக்கிறது. அந்த மைதானத்தைச்சுற்றி நேர்த்தியான தேவதாரு மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அந்தத் தேவி இருக்குமிடம் அதுவே. சுல்த்தான் அங்கேபோய்ச் சேர்ந்தவுடனே, கீழே இறங்கிக் குதிரையை ஒருமரத்திற் கட்டினான். பிறகு, அவன் அந்த இடைவெளியின் நடுவிற் போய் நின்றுகொண்டு. 'இக்கட்டுக் காலத்தில் என் முன்னோர்களுக்கு நீ உதவி இருப்பது உண்மையேயானால், என் பிரார்த்தனைக்கு இணங்கி நான் துன்பப்படுகிற வேளையில் எனக்குச் சகாயம் செய்யவேண்டும்' என்று உரத்தகுரலிற் கூவினான்.

12. அவன் அப்படிப் பிரார்த்தித்து ஓய்ந்தவுடனே, அந்தத் தேவதை அவன்முன் தோன்றினாள். அவள் தலைமுதல் கால்வரையில் வெள்ளையாடை தரித்திருந்தாள். அவளுடைய முகமும் கொஞ்சம் மூடப்பெற்றிருந்தது. அவள் சுல்த்தானைப் பார்த்து, 'சுல்த்தான்! நீ வந்திருக்கிற காரியம் எனக்குத்தெரியும். உன்னிடத்திற் களங்கமில்லை. உனக்கு நான் சந்தோஷமாகச் சகாயம் செய்கிறேன். இந்த இரண்டு பெட்டிகளையும் கொண்டுபோ. உன்னுடைய மகனென்று சொல்லுகிறவர்கள் இருவருள் ஒவ்வொருவனும் ஒவ்வொரு பெட்டியைத் தேர்ந்து எடுத்துக்கொள்ளட்டும். உன்னுடைய உண்மையான மகன் சரியான பெட்டியையே தெரிந்தெடுப்பான் என்பது நிச்சயம்' என்று இனிய குரலிற் சொன்னாள்.

பிறகு, அவள் அவன் கையில் அழகிய சிறு பெட்டிகள் இரண்டைக் கொடுத்தாள்; அவை தந்தத்தினற் செய்யப் பெற்றவை; தங்கமும் முத்தும் இழைக்கப் பெற்றவை; அவற்றின் மூடிகள்மீது வைரக் கற்களினற் சில வார்த்தைகள் பதியப் பெற்றிருந்தன.

13. திரும்பிப் போகையில், அந்தப் பெட்டிகளுக்குள் என்ன இருக்குமோ என்று சுல்த்தான் ஆச்சரியப் பட்டுக் கொண்டே போனன். அவன் எவ்வளவு பலமாகத் திறந்து பார்த்தும் அவற்றைத் திறக்க முடியவில்லை. ஒரு பெட்டியின்மீது, 'கௌரவமும் புகழும்' என்னும் வார்த்தைகளும், மற்றென்றின் மீது, 'ஆனந்தமும் பாக்கியமும்' என்னும் வார்த்தைகளும் எழுதப் பெற்றிருந்தன. அந்த இரண்டு பெட்டிகளுக்குமுள்ள வித்தியாசம் அது ஒன்றே. இரண்டு பெட்டிகளும் நல்ல பயன்களையே தருவனவாக இருப்பதனல் அந்த இளைஞர்கள் அவற்றுள் எதை எடுத்துக் கொள்வதென்று நிச்சயிப்பது கஷ்டமான காரியமன்றே? சுல்த்தானும் அது கஷ்டமென்றே நினைத்தான்.

எட்டாம் அத்தியாயம்

ஓமார் தன் பதவியைப் பெற்றது

1. சுல்த்தான் தன் அரண்மனைக்குத் திரும்பிப் போனவுடனே சுல்த்தானவை வரவழைத்துத் தான் செய்த காரியத்தையும் தேவதை சொன்ன வார்த்தைகளையும் அவளுக்கு உரைத்தான். அதைக் கேட்டவுடனே அவளுக்குத் தைரியம் பிறந்தது; தான் சொப்

பனத்திற் பார்த்தவன் சரியான பெட்டியையே தெரிந்தெடுப்பானென்று நினைத்தாள்.

2. சுல்த்தான் தன் சிங்காதனத்திற்கு எதிரில் இரண்டு சிறிய மேஜைகளைப் போடுவித்து அவைகளின் மீது அந்தப் பெட்டிகள் இரண்டையும் தானே வைத்தான். பிறகு, அவன் சிங்காதனத்தில் உட்கார்ந்து கொண்டு, ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு அந்த அறையின் கதவுகளைத் திறக்கச் சொன்னான். வெளியிற் காத்துக்கொண்டிருந்த அனேக ராஜாக்களும் பிரபுக்களும் உள்ளே வந்து அங்கே பரப்பியிருந்த சிங்காரமான மெத்தைகளில் உட்கார்ந்து கொண்டார்கள். அந்த மெத்தைகள் சுவர்களின் ஓரமாகச் சுற்றிலும் பரப்பப் பெற்றிருந்தன.

3. எல்லாரும் அவரவர்களுடைய ஆசனத்தில் அமர்ந்த பிறகு, சுல்த்தான் ஒரு சைகை காட்டினான். உடனே லாபாகானை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அவன் மிகுந்த அகம்பாவத்தோடு அந்த அறையில் நடந்து சென்று சிங்காதனத்தின் முன்னால் முழந்தாளிட்டுப் பணிந்து, 'என் தகப்பனாராகிய இறைவர் எனக்கு என்ன ஆக்கினை இடுகிறார்?' என்று கேட்டான்.

சுல்த்தான் சிங்காதனத்தினின்று எழுந்து, 'மகனே, நீ என் பிள்ளை யென்பதை ஜனங்கள் நம்பவில்லை என்கிறார்கள். இத்தச் சிறு பெட்டிகள் இரண்டினுள் ஒன்றில் உன்னுடைய உண்மையான பிறப்பு இன்னதென்று தெரிவதற்கான அத்தாக்ஷி இருக்கின்றது. நீ அதனைத் தெரிந்து எடு. நீ சரியான பெட்டியையே பார்த்து எடுப்பா யென்பதில் எனக்குச் சந்தேகமில்லை' என்றான்.

4. லாபாகான் அந்தப் பெட்டிகள் இருக்கும் பக்கமாகத் திரும்பி அவைகளை வெகுநேரம் பார்த்துக் கொண்டே யிருந்தான். எந்தப் பெட்டியை எடுப்பதென்று அவனுக்குத் தோன்ற வில்லை.

கடைசியில் அவன், ‘என் அருமைத் தந்தையே, தங்களுக்கு மகனுக இருப்பதைவிடப் பெரிய ஆனந்தம் உண்டோ? தங்களுடைய அன்பைவிட அதிகமான பாக்கியம் உண்டோ? “ஆனந்தமும் பாக்கியமும்” என்னும் வார்த்தைகளுள்ள பெட்டியையே நான் தெரிந்தெடுக்கிறேன்’ என்றான்.

‘நீ சரியாகப் பொறுக்கி யெடுத்துக்கொண் டிருக்கிறாயா என்பதைப் பிறகு பார்ப்போம். சற்றுநேரம் உட்கார்ந்திரு’ என்று சுல்த்தான் அவனுக்குச் சொல்லிவிட்டு, ஓமாரை அழைத்துக் கொண்டு வருமாறு கட்டளை யிட்டான்.

5. லாபாகானுக்கும் அவனுக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவன் நிதானமாக நடந்து வந்தான்; முகத்தில் துக்கம் குடிகொண்டிருந்தது; ஆயினும், அதில் பெருந்தன்மை விளங்கியது. அவன் படுகிற விசனத்தைப் பார்த்துப் பிரபுக்களெல்லாரும் பரிதபித்தார்கள். அவன் சிங்காதனத்தின் முன் முழந்தாளிட்டுப் பணிந்து தன்னை வரவழைத்த காரியம் என்னவென்று கேட்டான். அங்கே வைத்திருக்கும் இரண்டு சிறு பெட்டிகளுள் ஒன்றை அவன் தெரிந்தெடுக்க வேண்டுமென்று சொன்னவுடன், அவன் அவை வைத்திருந்த மேஜையண்டை போனான்.

6. இரண்டு பெட்டிகளின் மூடிகளின் பேரிலும் எழுதியிருந்தவார்த்தைகளை அவன் கவனமாக வாசித்து

விட்டு, 'ஆனந்தமும் பாக்கியமும் எவ்வளவு சீக்கிரத்தில் மாயமாகின்றன என்பதை நான் இப்போது சிலநாளாக நன்ருய்த் தெரிந்துகொண் டிருக்கிறேன். தீரர்களின் இருதயத்திற் கௌரவம் என்றென்றைக்கும் நிலையாக இருக்கிறதென்பதையும், புகழ் ஒருபொழுதும் போகாது என்பதையும் நான் தெரிந்துகொண் டிருக்கிறேன். எனக்குக் கிரீடம் கிடைப்பது தப்பிப் போவதாக இருந்தாலும், "கௌரவமும் புகழும்" என்னும் சொற்களுள்ள பெட்டியையே நான் எடுப்பேன்' என்று உறுதியாகச் சொன்னுன்.

7. அவன் அந்தப் பெட்டியின் மீது கையை வைத்தான். சுல்த்தான் அவனை அப்படியே இருக்கச் சொல்லி, லாபாகானைக் கூப்பிட்டு அவன் தெரிந்தெடுத்த பெட்டியின்மீது அவன் கையை வைக்கச் சொன்னுன். அப்படி அவர்கள் அந்தந்தப் பெட்டியின்மீது கையை வைத்துக்கொண்டு நிற்கையில், சுல்த்தான் தன் வேலைக்காரர்களை அழைத்துப் புஷ்கரணியிலிருந்து தீர்த்தம் எடுத்துக்கொண்டு வரச் சொன்னுன்.

8. புஷ்கரணி தீர்த்தம் வந்தவுடனே அவன் தன் கைகளைக் கழுவிக்கொண்டு கிழக்கு முகமாகத் திரும்பி முழந்தாளிட்டுக் கொண்டு,—'என் மூதாதையர் முதலாகப் போற்றும் என் குல தெய்வமே! எத்தனையோ தலைமுறைகளாக எங்கள் வமிசத்தைப் பரிசுத்தமாகப் பாதுகாத்து வந்திருக்கிருய். இப்போது எங்கள் குலப் பெருமைக்குக் குறைவு வாராதபடி, இந்த இருவர்களுள் எவன் என்னுடைய உண்மையான மகன் என்பதை விளக்கி. இந்தப் பெருஞ் சங்கடத்தைத் தீர்ப்பாயாக' என்று பிரார்த்தித்தான்.

9. மேற் சொல்லியபடி குல தேவதையைப் பிரார்த்தித்த பிறகு, அவன் எழுந்து தன் சிங்காதனத்திற் போய் உட்கார்ந்து கொண்டான். அந்த அறையில் இருந்தவர்களெல்லாரும் 'ஈப்பாக்கு' வைத்தாற் போல மௌனமாக அசைவற்று இருந்தார்கள். கெட்டியாக மூச்சு விடுவதற்குக் கூட எவருக்கும் தைரியமில்லை; எங்கும் நிச்சப்தமாக இருந்தது. இனி என்ன நடக்கப் போகிறதென்று பார்ப்பதற்கு எல்லாரும் ஆவல் மிகுந்திருந்தார்கள். பின்புறத்தில் இருந்தவர்களெல்லாரும் அந்தப் பெட்டிகளைப் பார்ப்பதற்காகக் கூடிய மட்டும் முன்னால் தலையை நீட்டினார்கள்.

10. அவனவனுடைய பெட்டியைத் திறக்கும்படி அந்த இளைஞர்களுக்கு சுல்த்தான் கட்டளையிட்டான். அவர்கள் அந்த மூடியைத் தொட்ட மாத்திரத்தில் அவை திறந்து கொண்டன. அதைக் கண்டு எல்லோரும் அதிசயித்தார்கள், ஒமாரின் பெட்டியில் ஒரு சிறிய மக்மல் திண்டும் அதன்மீது ஒரு சிறு சொர்ண கிரீடமும் செங்கோலும் இருந்தன. லாபாகானுடைய பெட்டியின் அடியில் ஒரு நீண்ட ஊசியும் கொஞ்சம் நூலும் கிடந்தன.

11. அவனவனுடைய பெட்டியைத் தன்னண்டையெடுத்துக் கொண்டு வரும்படி சுல்த்தான் சொன்னான். ஒமாரின் பெட்டியிலிருந்த சிறு கிரீடத்தை யெடுத்துக் கையில் வைத்துக் கொண்டான். அது வரவரப் பெரிதாகிக் கடைசியில் நிஜமான கிரீடத்தின் அளவு பருத்தது. அதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அந்தக் கிரீடத்தை ஒமாரின் தலைமீது வைத்தான். அப்போது ஒமார் அவன் முன்னால் முழந்தாளில் நின்றுகொண்டு இருந்தான். அவன் ஒமாரின் உச்சி மோந்து முத்த

மிட்டு, அவனை எழுந்திருக்கச் சொல்லித் தனக்கு வலது புறத்தில் உட்காரவைத்துக் கொண்டான்.

12. பிறகு, நடுங்கிக்கொண் டிருந்த லாபாகானைப் பார்த்து, 'அம்பட்டனுக்கு அடப்பமே கதி' என்றொரு பழமொழி யுண்டு. நீ உன் ஊசியை கடைப் பிடிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. உனக்கு இரக்கம் பாராட்டலாகாது. ஆயினும், என் மகனுக்காக உன்னை ஒன்றும் செய்யாமல் விடுகிறேன். உடனே என் ராஜ்யத்தை விட்டு ஓடிப் போ' என்று சொன்னான்.

13. அந்த எளிய தையற்காரன் மிகவும் வெட்கமுற்றவனாகி, இனி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தான். பிறகு, அவன் கண்ணும் கண்ணீருமாக ராஜகுமாரனுடைய காலில் வீழ்ந்து, 'என்னை மன்னிக்க வேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

ஓமார் அவனை நிதானித்துப் பார்த்து, 'உற்றார்க்கு உண்மையன், செற்றார்க்குச் சேட்டன்' என்பதே எனது விருது. நீ சுகமாகப் போ', என்று சொன்னான்.

ஓமாரைச் சுல்த்தான் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, 'நீயே என்னுடைய உண்மையான மகன்' என்று சொன்னான். அந்த அறையிலிருந்த பிரபுக்களும் வேலைக்காரர்களும் உடனே எழுந்து, 'புதிய இளவரசர் வாழி' என்று ஆசீர்வதித்தார்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்.

லாபாகான் அலெக்சாண்டிரியாவுக்குத் திரும்பியது.

1. அந்த அறையிலிருந்தவர்கள் ஓமாரைப் பார்த்துச் சந்தோஷமாக ஆரவாரித்துக்கொண் டிருக்கையில், லாபாகான் தன்னுடைய பெட்டியைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு மெதுவாக வெளியே நழுவிவிட்டான். அங்கிருந்து சுல்த்தானுடைய லாயத்திற்குப் போய், 'மூர்வா' என்னும் தன்னுடைய பழைய குதிரைக்குச் சேணம் கட்டி அதன்மீது ஏறிக்கொண்டு, வெளிப்பட்டு அலெக்சாண்டிரியாவை நோக்கிப் போய்க்கொண்டு இருந்தான். அப்படி அவன் போகையில் அதுவரையில் நடந்ததெல்லாம் அவனுக்குக் கனவுபோலிருந்தது. அவன் கையுடன் கொண்டு வந்திருந்த பெட்டி மாத்திரம் இல்லாவிடின், அந்த வர்த்தமானங்களெல்லாம் நிஜமாக நடந்ததாக அவன் நினைத்திருக்கவே மாட்டான்.

2. அலெக்சாண்டிரியாவுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே, அவன் தன்னுடைய பழைய யஜமானனுடைய வீட்டுக்குப் போனான். தன் குதிரையைக் கதவிற் கட்டிவிட்டுத் தையற்கடைக்குள் புகுந்தான். அவன் தரித்திருந்த மேன்மையான உடுப்புகளையும் அவனையும் பார்த்தவுடனே யஜமானன் அவன் இன்னானென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. யாரோ பெரிய மனிதன் வேலை கொடுக்க வந்திருக்கிறானென்று அவன் நினைத்தான். அந்த நினைவின்பேரில் யஜமானன் தன்னால் ஆகவேண்டிய காரியம் என்னவென்று அவனைப் பார்த்துக் கேட்டான். பிறகு, உற்றுப் பார்க்கையில், அவன் லாபாகான் என்று தெரிந்தது.

3. யஜமானன் மற்ற வேலைக்காரர்களைக் கூப்பிட்டு லாபாகான் வந்திருக்கிறானென்று சொல்லவே, அவர்கள் கோபாவேசத்தோடு ஓடிவந்து லாபாகான்மீது பாய்ந்தார்கள். அவர்கள் அப்படிச் செய்வார்களென்று லாபாகான் நினைக்கவே இல்லை. அவர்கள் அவனை மொத்தினார்கள், மோதினார்கள், அடித்தார்கள், கஜக்கோல்களினால் இடித்தார்கள், ஊசிகளினாற் குத்தினார்கள், கத்திரிக்கோல்களினாற் கத்திரித்தார்கள். அவன் அத்தனையும் தாங்கமாட்டாமற் களைத்து அங்கிருந்த பழந்துணிக் குவியலின்மீது விழுந்தான்.

4. அவன் அங்கே கிடக்கும்போது யஜமானன் அவனைப் பார்த்து அவன் திருடிக்கொண்டுபோன ராஜகுமாரனது உடுப்பைப்பற்றிக் கடுமையாகச் சில வார்த்தைகள் சொன்னான். அதன் கிரயத்தைக் கொடுப்பதற்காகவே திரும்பி வந்திருப்பதாக லாபாகான் எவ்வளவு சொல்லியும் யஜமானன் கேட்கவில்லை அப்பொழுதே அதற்குள்ள விலைக்கு மூன்று பங்கு கொடுப்பதாகச் சொன்னான்.

5. பிறகு, யஜமானனும் மற்றத் தையற்காரர்களும் அவனை மறுபடி நன்றாக அடித்து உதைத்து வீட்டுக்கு வெளியே துரத்திவிட்டார்கள். அவனுக்குக் களைப்பு மேலிட்டிருந்தது, உடம்பெல்லாம் புண்ணாக இருந்தது. அந்த ஸ்திதியில் அவன் மறுபடி குதிரையேறி ஒரு பழைய சத்திரத்திற் போய்க் களைப்பாறலாமென்று போனான்.

6. அந்தச் சத்திரத்தில் அவன் களைப்பாறிக்கொண்டிருக்கையில், தன் வாழ்க்கையைப் பற்றியும், தன்னுடைய சுகத்தைப்பற்றியும், அதனால் விளைந்த துன்பங்களைப் பற்றியும் அவன் சிந்தித்துப் பார்த்து, இனித் தன்

நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு நாணயமாக வேலை செய்து பிழைக்கவேண்டுமென்னும் தீர்மானத்துடன் உறக்கமுற்முன்.

7. மறுநாள் அவன் எழுந்திருந்தபோது அகந்தை அவனைவிட்டு அகன்றது. யஜமானனும் மற்ற வேலைக்காரர்களும் அதனை அவனிடத்திலிருந்து அடித்துத் துரத்திவிட்டார்கள். அவன் தன் பெட்டியைப் பெருந்தொகைக்கு விற்று, அந்தப் பணத்தைக்கொண்டு ஒரு வீடுவாங்கி, அதனை 'தர்ஜிகாளு'வாக ஆக்கினன்.

8. தொழிற்சாலைக்கு வேண்டியவைகளையெல்லாம் ஒழுங்காக ஏற்பாடுசெய்துவிட்டு, 'லாபாகான், தையற்காரன்' என்று ஒரு பலகையில் எழுதுவித்து அதை ஜன்னலில் தொங்கவிட்டான். பிறகு, அவன் உட்கார்ந்துகொண்டு, தன்பெட்டியிற் கிடைத்த ஊசியையும் நூலையுங் கொண்டு துணிகளைத் தைக்க ஆரம்பித்தான்.

9. சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் தையலை நிறுத்திவிட்டு வேறு வேலையைக் கவனிக்கப்போனுன். அவன் மறுபடி தையல்வேலை செய்வதற்குத் திரும்பி வந்தபோது, அந்த ஊசி தானகவே நேர்த்தியாகத் தைத்துக்கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அதுவுமன்றி, அதிலிருந்த நூல் கொஞ்சங்கூடச் செலவாகாமலிருந்ததைப் பார்த்தவுடன் ஆச்சரியம் அதிகமாயிற்று. அப்படிப்பட்ட மாய ஊசியும் நூலும் இருந்ததனல், லாபாகான் செய்யவேண்டிய காரியமெல்லாம் துணியைக் கத்திரித்து ஊசியைக் கோத்துவிட வேண்டியதுதான். அது தானகவே தைத்து உடுப்பைச் சித்தம் செய்துவிடும். அம் மாதிரியாக அவன் வேலை செய்ததனல், ஏராளமான வேலை அவனிடத்தில் வந்து வீழ்ந்தது.

10. சீக்கிரத்தில் அவனுக்கு வாடிக்கைக்காரர்கள் அனேகர் ஏற்பட்டார்கள். அவனுடைய பெயரும் கீர்த்தியும் சொற்ப காலத்திலேயே வெகு தூரத்திற்கு வெகுதூரம் பரவின. அவன் கூலியை மிதமாக ஏற்படுத்தியதனால், அவனுக்கு வியாபாரம் பெருகியது. தன்னுடைய மாய ஊசியும் நூலும் வேலை செய்வதை எவரும் பார்க்காமலிருக்கும் பொருட்டு அவன் தன் கதவுகளை எப்பொழுதும் மூடிவைப்பான்.

11. இவ்விதமாக, அந்தப் பெட்டியின் மூடியில் எழுதப் பெற்றிருந்த வார்த்தைகள் உண்மையாயின; ஆனந்தமும் பாக்கியமும் அவனுக்குப் பெருகின; அவற்றிற்குத் தகுந்தபடியே நடந்துகொள்வதற்கு அவனும் முயன்று வந்தான். இளஞ் சுல்தானாகிய ஒமார் மிகப் பிரசித்தி பெற்று விளங்குவதையும், குடிகளெல்லாம் அவனிடத்து அன்பாக இருப்பதையும், எல்லாரும் அவன் பெயரைச் சொல்லும்போதே மரியாதையாக இருப்பதையும், இதற்கெல்லாம் அவனுடைய தைரியமே காரணமென்பதையும் லாபாகான் கேட்டு, 'நான் தையற்காரனாக இருப்பதே நலம்; "கௌரவமும் புகழும்" எனக்கு ஏற்கா' என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

12. இவ்வாறு லாபாகான் சுகமாகவும் திருப்தியாகவும் காலம் கழித்து வந்தான். ஊரிலுள்ளவர்களெல்லாரும் அவனிடத்தில் நல்ல மதிப்பு வைத்திருந்தார்கள்.

புத்திக்குச் சம்மானம்

பெர்ஷிய சக்கரவர்த்தி ஒரு சமயத்தில் வேட்டைக்குப் போயிருந்தார். போயிருந்த இடத்தில் வயதில் மூத்த கிழவன் ஒருவன் கடுக்காய்ச்செடி நட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு, அவனைப் பார்த்து, 'உன் வயது என்ன?' என்று அவர் கேட்டார். அந்தக் குடியானவன், 'எனக்கு நாலு வயது ஆயிற்று' என்று பதில் சொன்னான். சக்கரவர்த்தியினிடத்தில் அப்படிப்பட்ட அசந்தர்ப்பமான பதில் சொல்லுவது சரியன்றென்று அவருடைய பரிவாரத்தி லொருவன் அவனைக் கண்டித்தான். அதற்குக் குடியானவன், 'நீ என்னைக் காரணமின்றிக் கண்டிக்கிறாய். நான் யோசனை யில்லாமல் பதில் சொல்லவில்லை. ஏனெனில், மடமையிலும் இவ்வுலகத்து வாழ்க்கைக்கு உரியவைகளிலும் செலவழித்த காலத்தைப் புத்திசாலிகள் தம் ஜீவித காலமாகக் கணக்கிட்டுக் கொள்ளார். ஆகையால், கடவுளை வழிபட்ட காலமும் ஜன சமுதாயத்திற்கு நான் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிய காலமும் மாத்திரமே என்னுடைய உண்மையான வாழ்நாள் என்று நான் கணக்கிடுகிறேன்' என்று பதில் சொன்னான். அவன் சொல்லிய வார்த்தைகளின் புதுமையும் விசேஷ ஞானமும் சக்கரவர்த்தியின் மனத்திற் பட்டு, 'நீ இப்பொழுது நடுகிற செடி முளைத்துப் பெரிதாகிப் பயன் தருமளவும் நீ ஜீவித்திருக்க முடியாதே' என்று அவர் அவனைப் பார்த்துச் சொன்னார். 'நன்று; ஆனால்

நாம் அனுபவிக்கும் பொருட்டு மற்றவர்கள் மரங்களைப் பயிரிட்டு வைத்திருந்தார்களாதலால், நமக்குப் பின்னால் வருகிறவர்கள் அனுபவிப்பதற்காக நாம் பயிரிடவேண்டியது சரியான காரியமே யாகும்' என்று அந்தக் கிழவன் பதில் சொன்னான். 'சஹபாஷ்!' (மிகவும் நேர்மையாக இருக்கிறது) என்று சக்கரவர்த்தி சந்தோஷப்பட்டார். அரசன் சந்தோஷித்து ஒருவனைக் கௌரவப்படுத்துவதென்றால் அந்தக் காலத்தில் வழக்கமாகச் செய்வது போல, ஆயிரம் பொன் பணம் அடங்கிய பை ஒன்றை அந்தக் கிழவனுக்கு இனாமாகக் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக்கொண்டு அந்த யூகமிகுந்த குடியானவன் தலை குனிந்து அரசனுக்குப் பணிந்து, 'மகாராஜ! மற்றவர்களுடைய மரங்கள் பயன் தருவதற்கு நாற்பது வருஷகாலம் செல்லும்; ஆனால், என் மரமோ நட்டவுடனே பயன் தந்துவிட்டது' என்றான். 'பேஷ் என்று சக்கரவர்த்தி சந்தோஷப் பட்டார். உடனே அவனுக்கு மற்றொரு பணப்பை வெகுமதி கொடுக்கப் பட்டது. அதைப் பெற்றுக்கொண்ட வுடனே கிழவன், 'மற்ற மரங்களெல்லாம் வருஷத்திற்கு ஒரு முறையே காய்க்கும்; ஆனால், என் மரமோ ஒரே தினத்தில் இருமுறை காய்த்தது' என்றான். 'வெகு இனிமையாக இருக்கிறது' என்றார் சக்கரவர்த்தி. உடனே மற்றுமொரு பணப்பை அவனுக்கு அளிக்கப்பட்டது. அதன்மீது சக்கரவர்த்தி, 'பூஜிக்கத் தக்க தந்தையே! இனி உங்களுடன் அதிகமாக இருக்கமாட்டேன். இருந்தால் உங்களுடைய புத்தி சாதுரியம் என் கஜானா முழுமையும் வெறுமையாக்கி விடும்' என்று சொல்லி, குதிரையை நடத்திக்கொண்டு போய்விட்டார்.

இடையன் வர்த்தகனானது

கடற்கரைக்குச் சமீபமான ஓர் ஊரில் ஓர் இடையன் இருந்தான். வஸந்தகாலத்தில் ஒருநாள் அவன் தன் ஆடுகளை யெல்லாம் சமுத்திரக் கரையோரமாக ஓட்டிக்கொண்டுபோய் மேயவிட்டு, அருகிலிருந்த குன்றின்மீது உட்கார்ந்து சுகமாகக் காற்று வாங்கிக்கொண்டிருந்தான். கடல் அமைதியாக இருந்தது. அதில் சென்றுகொண்டிருந்த கப்பல்களின் பாய்கள் (வெளுப்பான கெட்டித் துணித் திரைகள்) அலையற்ற கடல்நீரில் அழகாகப் பிரதிபலித்தன. இடையனுக்கு உள்ளுக்குள்ளே ஆனந்தம் பொங்கியது. தான் வர்த்தகனாகப் போகவேண்டுமென்னும் விருப்பம் அவனுக்கு உண்டாயிற்று. 'புத்தியில்லாத ஆடுகளை மந்தையாகக் கட்டி அவைகளை மேயவிட்டுச் சோம்பலாய் இங்கே உட்கார்ந்து அவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதைவிட, சொந்தமாக ஒரு சிறு கப்பல் வாங்கி அதிலேறி இந்த நீர் வெளியில் உழுவதுபோல ஓடிச் சென்று தூரத்திலுள்ள பல நாடுகளையும் விசித்திரமான தேசங்களையும் போய்ப் பார்ப்பது எவ்வளவு இனிமையாக இருக்கும்! சரக்குகளை ஏற்றிச் செல்வதனால் எனக்கு எவ்வளவு நல்ல லாபம் கிடைக்கும்! செல்வவான் ஆவதற்கும் கௌரவம் பெறுவதற்கும் இதுவன்றோ நிச்சயமான வழி?' என்று அவன் தனக்குத்தானே பேசிக்கொண்டான். அதன்மீது அவன் உடனே வர்த்தகன் ஆக

வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டான். அங்கிருந்து வெகு வேகமாக அவன் வீட்டுக்குத் திரும்பிப் போய், ஆடுகளையும் மற்றுமுள்ள சொத்துக்களையும் எல்லாம் விற்று, ஓர் அழகிய கப்பலை வாங்கி, பிரயாணத்திற்கு வேண்டியபடி அதைச் சித்தப்படுத்தினன். பேரீச்சம் பழங்களை மூட்டை மூட்டையாக வாங்கி அந்தக் கப்பலில் ஏற்றிக்கொண்டு, ஆசியா கரையோரத்தில் அதை விற்கக்கூடிய ஓரிடத்திற்குப் புறப்பட்டான். அவன் உத்தேசித்த இடம் இருநூறு முந்நூறு மைல் தூரத்தில் இருந்தது. அவன் கொஞ்சதூரம் கடலில் சென்றவுடனே, காற்று மும்முறமாக அடிக்க ஆரம்பித்தது, அலைகள் வீசிப் பெருத்துப் புரண்டன. வரவரப் புயல் கடுமையாக அடிக்கத் தலைப்பட்டது, கப்பல் முழுகிப் போகும்போல் இருந்தது. முழுகாமல் அதை மீத்துக்கொள்ளும் பொருட்டு அதிலிருந்த பேரீச்சம் பழ மூட்டைகளை யெல்லாம் அவன் எடுத்துக் கடலில் எறியவேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு கப்பலைக் கரையோரமாகக் காற்று அடித்துக்கொண்டு போய் ஒதுக்கி மோதித் தகர்த்துவிட்டது. அவன் உயிர் பிழைத்துத் தப்பியதே அருமையாய்ப் போயிற்று. பசி மிகுந்து குளிரினல் விறைத்து அவன் சமீபத்திலிருந்த கிராமத்தை நாடிச் சென்றன். தன்னிடத்திலிருந்து ஆடுகளை விலைக்கு வாங்கினவனை அங்கே கண்டு, அந்த ஆடுகளை மேய்ப்பதற்கு அவனிடத்தில் அவன் வேலைக்கு அமர்ந்தான். மந்தையை மேய்த்துக்கொண்டு முன்னல் உட்கார்ந்திருந்த இடத்திலேயே இப்போதும் போய் அவன் உட்கார்ந்துகொண்டிருந்தான். சமுத்திரம் மறுபடி அமைதியாக அலையற்று இருந்தது. 'ஆ! வஞ்சித்து இழுத்து மோசம் செய்யும்

கடலே! நீ என்னை இரண்டாம் முறை இழுத்து இழவு எடுக்கப் பார்ப்பது வீண். இதுவரையில் எனக்கு வந்த ஆபத்துக்களினால் மிகுந்த ஏழையாகி நொந்திருக்கிறேன். இனி, அந்த மாதிரி மோசம் போய் ஏமாறுவதற்கு என்னிடத்தில் பணமில்லை. இதுவரையில் பட்ட கஷ்டத்தினால் எனக்குப் புத்தி வந்துவிட்டது; என் நிலைமை எப்படியிருந்தாலும், இனி உன்னுடைய ஆழங் காணாத ஜலத்தை நம்பி இறங்க மாட்டேன்' என்று அவன் சொன்னான்.

PERSONAL HYGIENE

ஆரோக்கிய பாடம்

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நாள்தோறும் சிற்சில காரியங்கள் செய்யவேண்டி யிருக்கின்றன. அவை எவருக்கும் இன்றியமையாதவைகள். அவை ஊண், உடுப்பு, உறக்கம் முதலியனவாம். அந்தக் காரியங்களை எப்படிச் செய்தால் ஆரோக்கியம் அமையும், சுகம் எய்தும், வாழ்க்கை இன்புறும் என்பதை இப்புத்தகம் விளக்குகின்றது.

காலை முதல் மாலை வரையில் சரீர போஷணையின் பொருட்டு நமக்கு ஏற்பட்டிருக்குங் காரியங்களைச் செவ்வனே செய்யும் வகைகளை இதனிலுள்ள பாடங்கள் விவரிக்கின்றன. அந்தப் பாடங்கள் வருமாறு:—

1. காலை எழுச்சி, 2. சரீரப் பயிற்சி, 3. தேகோபாதை தீர்த்துக் கொள்ளல், 4. விரேசனம், 5. சௌசம். 6. தந்த சுத்தி, 7. க்ஷௌரம், 8. நீராடல், 9. ஆடை, 10. ஆடையும் ஆரோக்கியமும், 11. ஆடை செய்யும் வஸ்துவகைகள், 12. ஆஹாரம், 13. போஜனவிதிக் குறிப்புகள், 14. நித்திரை, 15. மூச்சுவிடுதல், 16 சுசி.

இந்தப் பாடங்களில் ஒவ்வொன்றும் ம-ா-ா-ஸ்ரீ, க. ரா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டு வரும் "நல்லாசிரியன்" என்னும் மாதப் பத்திரிகையிற் பதிப்பிக்கப்பட்டுப் பலராலும் புகழப்பட்டது. "ஆரோக்கிய போதினி" என்னும் தமிழ்ப் பத்திரிகைக்கும், "ஆரியா" என்னும் அங்கிலப் பத்திரிகைக்கும் ஆசிரியரா யிருந்த தி. அ. சாமிநாத ஐயர் எழுதியது. இது சிறுவர்கள் அவசியமாய்ப் படிக்கவேண்டிய புத்தகம்.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

பப்ளிஷர்ஸ்,

35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.

சிறுவர்களுக்கான கதைகள்

	ரூ.	அ.	பை.
புதிய வனத்துக் குழந்தைகள்	0	10	0
கற்புக்கரசி	0	6	0
பிராப்டிங்னுக் யாத்திரை	0	6	0
லபுடா யாத்திரை	0	4	0
லிலிபுட் யாத்திரை	0	4	0
பஞ்சதந்திரம்	0	4	0
விவேக சந்திரிகை	0	4	0
அசோகர் சரித்திரம்	0	4	0
ராபின்ஸன் குரூஸோ...	0	4	0
நாற்பது திருடர் கதை	0	3	0
அல்லாவுதீன்	0	2	6
விக்டோரியா நல்லரசி	0	2	6
பாண்டவர்சூது	0	2	0
மூராத்	0	2	0
இரட்டைப் பிள்ளைகள்	0	2	0
டிக் உட்டிங்க்டன்	0	2	0
மாயூரம்-இடபதீர்த்தம்	0	2	0
தெனுலி ராமன்	0	2	0
இராதா இராணி	0	2	0
மூன்று பரதேசிகள்	0	2	0
சீலஸம்பன்னன்	0	2	0
நற்பழக்கம்	0	2	0
மாயத் தாமரை	0	2	0
மாயப் பொம்மை	0	2	0
நீதிக்கோபுரம்	0	2	0
மல்லிகா	0	2	0
இரண்மயி	0	2	0

		ரூ.	அ.	ப
நல்ல பாடம்	... ...	0	1	6
செம்படவன்	... .	0	1	6
கைமன்	... ...	0	1	6
ஜனக் ஆர்டன்	... ...	0	1	6
திலகவதி	... ...	0	1	6
அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை	... ..	0	1	6
ஜயேசன்	... ...	0	1	6
ஜார்ஜ் மன்னன் விபவம்	... ...	0	1	6
கரிசிலாதாள்	... ...	0	1	6
அரிச்சந்திரன்	... ...	0	1	6
ஆபத்தில் நேசன்	... ...	0	1	6
செங்கை வளவன்	... .	0	1	6
ஆராயும் அங்குட்டன் கதை	... ...	0	1	6
போலி ராஜ குமாரன்	... .	0	1	6
நல்ல பிள்ளைகள்	... ...	0	1	0
நல்ல சிநேகிதர்கள்	... ...	0	1	0
மூன்று தங்க மாம்பழங்கள்	... ...	0	1	0
வெள்ளைப் பூனை	... ...	0	1	0
தோட்டக்காரன்	... ...	0	1	0
நான்கு பாடகர்கள்	... ...	0	1	0
நைட்டிங்கேல் அம்மையார்	... ...	0	1	0
பால நியாயாதிபதி	... ...	0	1	0
பச்சைதேவதை	... ...	0	1	0
வர்த்தகன்	... ...	0	1	0
கடற்கரை வாஸம்	... ...	0	1	0
காதர் அலி	... ...	0	0	6

TS
031,6c
x915

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
35, சின்னத்தம்பித் தெரு, சென்னை, கி.

PRINTED AT THE CAXTON PRESS, MADRAS, E. — 1915.

179448

2552/856

புதிய பதிப்புக்கள்

	ரூ.	அ.	பை.
பிரிதிவிராஜன்	1	0	0
கீசகன் ... (ராபர்)	0	12	0
Do. (காலிகோபயிண்டு)	1	0	0
ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி	0	12	0
ஐவன்ஹோ	0	12	0
ஏகம் பஞ்ச நதம்	0	10	0
புதிய வனத்துக் குழந்தைகள்	0	10	0
விக்டோரியா மஹாராணி சரித்திரம் ...	0	6	0
ஏழாம் எட்வர்ட் மன்னன்	0	6	0
முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ...	0	6	0
பிரிட்டிஷ் துரைத்தன நற்பயன் ...	0	6	0
தசகுமார சரிதம் (1-ஆம் பாகம்) ...	0	6	0
பஞ்சதந்திரம்	0	5	0
விவேக சந்திரிகை	0	4	0
ஸூக்ஷ்மதரிசி	0	4	0
கதைக்கொத்து மலர்-1	0	2	0
கதைக்கொத்து மலர்-2	0	3	0
கதைக்கொத்து மலர்-3	0	3	0
கதைக்கொத்து மலர்-4	0	5	0
கதைக்கொத்து மலர்-5	0	8	0

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

புத்தக வியாபாரிகள்,

35, சின்னதம்பித் தெரு,

சென்னை, கி.